Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLE'S DAILY

நாதம்: 01 பெப்ரவரி 15-02-1991 வெள்ளிக்கிழமை ஓசை: 362

## பல எதிர்ப்பின் மத்தியிலும் ஐ. நாவின் இரகசிய கூட்டம்

(நியூயோர்க்)

பல எதிர்ப்புகள் மத்தியிலும் ஐ.நா பாதுகாப்புச்சபை நேற்று நியூயோர்க்கில் இரகசியமாகவே கூடியது. இந்தக் கூட்டத்தைப் பகிரங்கமாக நடத்தும்படி பல நாட்டுப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்ட பின்பும், கூட்டம் இரகசியமாக நடைபெற்றது. கூட்டம் இரகசியமாக நடத்தப்பட வேண்டும் என்று 9 நாடுகளும். (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் போர்வையில் செயற்பட முனைவது

# "அப்பட்டமான சுயநல நோக்கன்றி வேறில்லை"

## பாலகுமாரன் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் திகதி பொதுச்சபையின் தீர்மானத்தின்படி ஈரோஸ் இயக்கம் கலைக்கப்பட்டுவிட்டது. தற்பொழுது கொழும்பிலோ அன்றி வெளிநாட்டிலோ ஈரோஸ் மீண்டும் புனரமைப்புச் செய்ய எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் தாம் ஆதரிக்கவோ, சம்பந்தப்படவோ போவது இல்லை என திரு. வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

ஈரோஸ் இயக்கம் என்ற பெயரில் சதிர் சுதாகரன் என்பவரால் கொழும்பில் பத்திரிகைகளுக்கு விடுக்கப்படும் செய்திகள் தொடர்பாக திரு. பாலகுமாரனிடம் எமது செய்தியாளர் கேட்ட கேள்விக்கே இவ்வாறு பதிலளித்தார்.

கடந்த நான்காம் திகதி ஏரிக்கரைப் பத்திரிகையில் சுதாகரன் என்பவரை மேற்கோள் காட்டி ஈரோஸ் புனரமைப்புச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் இருபதாம் திகதி பாராளுமன்றத்தில் ஈரோஸ் எம். பிக்கள் பதவி ஏற்பவர்கள் எனவும் செய்தி வெளிவந்திருந்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### ஜோன்சன் உட்பட 6 போராளிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவத்துடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் மேஜர் ஜோன்சனுடன் (நெடுங்கேணி), இராசா இராசேந்திரன் (திருமலை) அசோக், கப்டன் லெனின், அலெக்சன், றிச்சாட் அர்ச்சுனா ஆகிய போராளிகளும் வீரமரணம் அடைந்தனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## எரிபொருள் விநியோகத்தை உடன் நிறுத்தக் கோரிக்கை

அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான வசதியை உடனடியாக நிறுத்த வேண்டுமென இந்திரா காங்கிரஸ் கட்சி மத்திய அரசாங்கத்தை மீண்டும் வற்புறுத்தியுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு தீவிரம்

(சென்னை)

தமிழ் நாட்டில் தி. மு. க அரசு கலைக்கப்பட்ட தன்பின் கடற்கரை ஓரங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுக் கடலோரங்களில் 33 பொலிஸ் சோதனைச் சாவடிகள், 13 நடமாடும் காவல் நிலையங்கள், விசேட மத்திய பொலிஸ் படை 6 பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன.

## அடுத்த மாதம் இந்தியாவில் பட்ஜெட்

(டில்லி)

இந்தியாவில் 1991ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசாங்கம் ஊர்வலங்களுக்குத் தடை

(கொழும்பு)

கொழும்பில் அன்னையர் முன்னணியினர் ஏற்பாடு செய்துள்ள ஊர்வலங்களுக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளதாகவும், கூட்டம் நடாத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் ஊர்வலத்தையும், கூட்டத்தை (4ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்து ஒடுக்குமுறைக்கெதிராக சளைக்காது போராட வேண்டும்

– கௌரி

(யாழ்ப்பாணம்)

"சிறிலங்கா அரசின் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் சளைக்காது முகம் கொடுத்து அவற்றிற்கெதிராகப் போராடும் வீரமிக்க சந்ததியாக மாறி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான அனைத்து சக்திகளுக்கெதிராகவும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் போராட வேண்டும்"

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கௌரி நேற்று மானிப்பாயில் 'நிவாசியம்' சிறுவர் பூங்கா திறப்பு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பேசும் போது கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை, கல்வி மற்றும் மருத்துவத் தடை, இராணுவத் தாக்குதல்கள் போன்றவற்றால் எமது இளம் சிறுவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படாமல் தடுத்து சிறிலங்காவின் மேற்படி அநாகரீக நடவடிக்கைகளுக்கு எதிராக தீரத்துடன் போராடும் இளம் (4ஆம் பக்கம் பார்க்க)

## நாணாட்டானில் தடுப்பூசி ஏற்ற அத்தியட்சகர் ஏற்பாடு

(மன்னார்)

நானாட்டான் பகுதி மக்களின் வைத்திய சேவைகளைக் கவனிக்க மன்னார் சுகாதார அத்தியட்சகர் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

முருங்கன் வைத்தியசாலையில் தடுப்பூசி ஏற்றப்படும் அதே நாளில் நானாட்டானிலும் தடுப்பூசி ஏற்றப்படும். இதனால் நானாட்டானில் உள்ள குழந்தைகளும், மற்றவர்களும் நானாட்டான் வைத்தியசாலையிலேயே தடுப்பூசி மருந்து ஏற்றிக்கொள்ளலாம்.

## 48 மணி நேரத்தில் 16 படை பலி

(கொழும்பு)

திங்கள் முதல் புதன் வரையிலான 48 மணி நேரத்தில் 16 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே வேளை வவுனியாவில் நேற்று பதினொரு படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

## இந்தியா, பாகிஸ்தானிலிருந்து மருத்துவர்களை அழைக்கமுடிவு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் மருத்துவர், மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு இந்தியாவிலிருந்தும், பாகிஸ்தானிலிருந்தும் மருத்துவர்களை அழைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொழும்பில் சுகாதார சேவைகள் குழு முடி (4ஆம் பக்கம் பார்க்க)

## பாக்தாத் பதுங்குகுழி படுகொலை

# வெளிநாட்டு செய்தியாளர்கள்மீது மக்கள் காறி உமிழ்கிறார்கள்

(லண்டன்)

"பாக்தாத் மக்களின் துயர் எல்லைகடந்துவிட்டது. அழுகிறார்கள், அரற்றுகிறார்கள். சோகமே உருவாகக் காட்சி தருகிறார்கள். கொதிப்படைந்து ஆத்திரத்துடன் கூச்சலிடுகிறார்கள்"

பாக்தாத்தில் பொதுமக்கள் புகலிடமான பதுங்குகுழி ஒன்றின்மீது இடம்பெற்ற கூட்டுப் படைகளின் தாக்குதலையடுத்து அந்த நகரின் நிலைபற்றியும், தான் கண்ட காட்சிகள் பற்றியும் பி.பி.சி. நிருபர் அங்கிருந்து மேற்கண்டவாறு அறிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்: ஆத்திரமுற்ற இளைஞர்கள் தம்வசமுள்ள துப்பாக்கிகளால் வானத்தை நோக்கி (4ஆம் பக்கம் பார்க்க)

## பதவி விலகிய பர்னாலாவை வி. பி. சிங், கருணாநிதி சந்திப்பு

(சென்னை)

பதவி விலகிச் சென்ற தமிழ் நாடு ஆளுநர் எஸ் எஸ் பர்னாலாவை முன்னாள் பிரதமர் வி.பி.சிங், கருணாநிதி மற்றும் பல தேசிய முன்னணித் தலைவர்களும் நேற்றுச் சென்னையில் சந்தித்தார்கள்.

உயரிய கொள்கைகளைக் கட்டிக்காப்பதற்காக தனது பதவியைத் துறந்த பர்னாலா (4ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஆளுநராக பீஷ்மன்

(டில்லி)

தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக பீஷ்மன் நாராயண் சிங் இந்திய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## வரிவிளம்பரம்

**போட்டோஸ்ரட்**

போட்டோஸ்ரட் பிரதிகளையும், றேனியோ பிரதிகளையும், தமிழ் ஆங்கில ரைப்பிங் வேலைகளையும், உடனடியாகப் பெற்றுக்கொள்ள "ஸ்ரீ ..." 239 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (B 1994)

**திரவ சவர்க்காரம்**

வீட்டுச் சலவைக்குச் சக்தி மிக்க மிக்கவைத் திரவ சவர்க்காரம் Liquid Soap விளக்கெண்ணெய் சுத்தமான வேப்பெண்ணெய் விற்பனைக்கு உண்டு. ப.நோ.கூ. சங்கத்திலும் கிடைக்கும். (B 2007)

**விற்பனைக்கு உண்டு**

வீட்டுச் சலவைக்கு சக்தி மிக்க மிக்கவைத் திரவ சோப் Liquid Soap விளக்கெண்ணெய் சுத்தமான வேப்பெண்ணெய் ... ப.நோ.கூ. சங்கத்திலும் விற்பனைக்கு உண்டு. (B/2010)

## லொறி உரிமையாளர் கூட்டம்

வடபிராந்திய பொதி சுமக்கும் வாகன உரிமையாளர் சங்கக் கூட்டம் 16-2-1991 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கலவூரி மண்டபத்தில் நடைபெறும். அங்கு போக்குவரத்துச் சம்பந்தமான பல முக்கியமான விடயங்கள் ஆராயப்பட உள்ளன. சகல லொறி உரிமையாளர்களும் தவறாது சமுகமளிக்கவும். சமுகமளிக்கத் தவறும் உரிமையாளர்களின் லொறிகள் சேவையில் ஈடுபடுவது தடை செய்யப்படும் என்பதை அறியத் தருவதாக வடபிராந்திய பொதி சுமக்கும் வாகன உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. (R/1108)

## காணவில்லை

**கறுப்பையா லட்சுமி**

கறுப்பையா லட்சுமி என்று அழைக்கப்படும் சிறுமியை 13.02.1991 புதன்கிழமை காலை தொடக்கம் காணவில்லை. உயரம் 4 அடி, மெலிய தேகம், பொது நிறம்.

இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்திலோ அல்லது பின்வரும் விலாசத்திலோ தொடர்பு கொள்ளவும்;

தகவல்;
த. சுப்பிரமணியம்
8, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(R 1109)

## பிள்ளை மறைந்தமை

### சின்னையா சிவகுமார்

முள்ளியவளையைச் சேர்ந்த சின்னையா சிவகுமார் எனும் 12 வயது ஆண்பிள்ளை ... பள்ளிக்கூட சிப்பவர் 29 01 91 காலை ... ... சமுகத்தவர், ... சங்கீத வீதி, இராமலிங்கம் வீதி ... வேலி ... யாழ்ப்பாணம் எனும் ... இருந்து ... போனவர் காணாமற் போய்விட்டார். சில பெரிய ... தொடர்ந்து தீர்க்க முடியாத ... இருப்பதால் இப்பிள்ளையைப் பற்றி ... கட்டிய விலாசத்தில் ... தகவல் தந்துதவுமாறு பணிவன்பாக வேண்டுகின்றோம். இயன்ற சன்மானம் வழங்குவோம். (R/1104)

## DAY CLASSES - 90

பொருளியல் (வினாவிடையுடன்)

பிரிவு I 10-00 — 11-30 நடைபெறுகின்றது
பிரிவு II 11-30 — 1-00 மணிக்கு

15-2-1991 இல் ஆரம்பமாகின்றது

- 5 வருட வினாவிடை வகுப்பு
- திங்கள் முதல் வெள்ளி வரை

## A/L 91 DAY CLASSES

ஆரம்பமாகிவிட்டன.

ஆசிரியர்: திரு. உதயன்

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பாணம். (B 2012)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாய்க்காக 14-05-1966



தமிழீழத்துக்காக 14-02-1987

### மேஜர் கேடிலஸ்

ம. திலீபன் (கண்டாவளை)

ஈழத்தமிழ் மங்கை பெற்றெடுத்த ஓவியங்கள்
தமிழீழ விடியலின் வரலாற்றுச் சின்னங்கள்
புகழ்மணித் தேசிய விடுதலைப் பற்றியங்கள்
புவிபுகழும் உறுதிப் புனிதர்களின் நினைவு!
நால்காண்டின் மண்ணே!
அமைந்த அவை சேர்ந்த
நந்தமிழ் வேங்கை கேடிலஸ்!
அவன் பெயரே திலீபன்!
கண்ணின் மணியே எம் மகனே திலீபா!
விண்சென்ற ஆண்டுகள் விடியாத இரவாகி
உன்னும் எம்முயிரை இருந்தும் உயிர் வாழ்வோம்
எண்ணும் பொழுது உம் தியாகம் எம் பெருமை!
அம்மா, அப்பா.

வீட்டிற்கு பாப்பாவாய் விளையாடித் திரிந்த தம்பி
நாட்டிற்கு ஒரு நம்பியாய் போனதை நாம் மறவோம்
அக்கா, அண்ணா ராஜி, நிலாநேசன்

தாய் மானம் காத்க சேபாக நீ சென்றாய்
உன் நிழலாய் நானும் ஓடிவே வந்திடுவேன்
... காண்டீபன்

அன்பின் உறைவிடமே எங்கள் அன்பு அண்ணாவே
நின் நினைவே எம் மூச்சாய் தொடர்ந்தே நாம் -
வாழ்ந்திடுவோம்!

தங்கைகள் பாமினி, காயத்திரி

கண்டாவளை. (B/2016)



## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 15



கப்டன் சபேசன்
(யோ. ரவிச்சந்திரன்)

1986 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
- நவம் (... - பலவி குடியிருப்பு)
- செல்வன் (பத்தமகுட்டி மகேந்திரன் - பெரியவெளி

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்திய இராணுவத்தினரின் திடீர்ச் சோதனையின் போது சயனைட் அருந்தி வீரமரணமடைந்த
கப்டன் சபேசன் (யோ. ரவிச்சந்திரன் - இருதயபுரம், மட்டக்களப்பு)

1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த
2ஆம் லெப். சந்திரன் (நா. சந்திரகுமார் - காரைநகர்)
கண்ணன் (கு. தவயோகராசா - காரைநகர்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்;**


- மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டு வீரமரணத்தைத் தழுவியவர்களாவர்.

**— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B-2011)

## 13ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 - 05 - 1982



இறைவன் அடியில் 15 - 01 - 1991

### செல்வன் மரியயாகப்பு அருள்ராஜ்

நேற்றிருந்தாய் இன்றில்லை அருள்ராஜா
நேற்றிருந்த செந்தமிழே அன்புராஜா
பார்த்திருந்த காலமெல்லாம் பாசம் தந்தே
பரிதவிக்க வைத்தாயே ஆசைராஜா
ஆர்த்தெழுந்து நமக்காக பரலோகத்தில்
காத்திருக்கச் சென்றாயோ மகனே ராஜா

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணன்மார்
அக்கா (மேற்குஜேர்மனி) தங்கை

கோவில் குடியிருப்பு,
முல்லைத்தீவு. (R-1105)

ஐ. நா. செயலாளரிடம்

# குடிமக்கள் மீதான தாக்குதலுக்கு ஈராக் விளக்கம் கோருகிறது

(லண்டன்)

பாக்தாத் மீது நேற்று முன்தினம் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்கு அரபு மற்றும் உலக நாடுகள் பல கண்டனம் தெரிவித்துள்ளன.

ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக் அசீஸ் இந்த ஏவுகணைத் தாக்குதல் தொடர்பாக, நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டது பற்றி ஐ. நா. சபை பொதுச் செயலாளர் பெரஸ்டி கொய்யாவிடம் விளக்கம் கோரியுள்ளார்.

இது குறித்து ஐ. நா. தலைமைச் செயலாளரும், பாதுகாப்புச் சபையும் கண்டனம் செய்ய வேண்டுமென தாரிக் அசீஸ் கேட்டுள்ளார்.

இதே நேரம் பரவலாக அனைத்துலகமும் இந்தத் தாக்குதலுக்கு கவலையும், கண்டனமும் தெரிவித்துள்ளன.

ஜோர்டான் அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஜோர்டானில் துக்க தினம் அனுஷ்டிக்கப் போவதாகவும், கூட்டுப்படைகளின் இந்தத் தாக்குதலின் மூலம் அவர்கள் ஈராக்கிய இராணுவத் தளங்கள் மீது தாக்கவில்லை என்றும் திட்டமிட்டு ஈராக்கை அழிக்கிறார்கள் என்பதை புலனாகிறது எனவும் தெரிவித்துள்ளது.

மற்றும் டியூனிசியா, மொராக்கோ, அல்ஜீரியா, லிபியா, யேமன் நாடுகளும் இந்த ஏவுகணைத் தாக்குதல் குறித்து தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன.

யேமனில் அமெரிக்க உயர்ஸ்தானிகராலயம் தன்னியக்கத் துப்பாக்கிகளினால் தாக்கப்பட்டுள்ளது.

அதேவேளை யேமனிலும், அல்ஜீரியாவிலும் பாக்தாதில் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா

ஈராக் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல் சம்பவம் குறித்து கவலை தெரிவித்த அமெரிக்கா, இங்கு பதுங்கும் இடம் இராணுவத் தலைமை மற்றும் கட்டுப்பாட்டு மையமாக இருந்தது என்று கூறியுள்ளது.

பிரித்தானியா

ஈராக் மீதான தாக்குதல் மிகவும் துயரகரமானதும் ஒரு தவறான துமான நடவடிக்கை என்று பிரித்தானிய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எகிப்து

ஈராக்கில் பல மக்கள் உயிர் இழந்தது குறித்து தமது வருத்தம் வருந்துவதாக எகிப்து தெரிவித்துள்ளது.

இந்தியா

நூற்றுக்கணக்கான பெண்களும், குழந்தைகளும் இறந்து போவதற்குக் காரணமாயிருந்த இத் தாக்குதல் போர் நெறிகளுக்கு மாறானது என்று வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லா இன்று புதுடில்லியில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். இவையும் இதற்கு முன்னர் நடந்த நடவடிக்கைகளும் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தில் தரப்பட்டுள்ள ஆணையை மீறியதாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ. நா. தலைமைச் செயலாளர்

"அப்பாவிப் பொதுமக்கள் உயிர் இழந்தது குறித்து கவலைப்படும் அதேவேளை இதனைக் கண்டிக்கின்றேன் என்றும் இதனைத் தவிர்க்க மேற்கொண்ட முயற்சிகள் முறிவடைந்து போனதாலேயே உயிர் இழப்புக்கள் ஏற்பட்டது" என்றும் பெரஸ்டி கெய்யா தெரிவித்தார்.

## சேவை நலம் பாராட்டுவிழா

(கொழும்புத்துறை)

கொக்குவில் மகாதனிப் பாடசாலை அதிபர்கள் சங்கத்தின் ஆதரவில் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஸ்ரீ ஞான பண்டித வித்தியாலயத்திலிருந்து கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்கு மாறிச் சென்ற அதிபர் திரு. கா. கணேசநாதன் அவர்களுக்கு சேவைநலம் பாராட்டு விழா கொக்குவில் இந்துக்கல்லூரியில் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (24)

## கருத்தரங்கு

உள்ளூர் உற்பத்தி பொருள்களை ஊக்குவிப்பது மற்றும் அவசரகால உணவு உற்பத்தி தொடர்பான விசேட கருத்தரங்கு நாளை காலை 9-00 மணிக்கு நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் இடம்பெறும்.

இக் கருத்தரங்கை விவசாயத் திணைக்களம், அபிவிருத்திச் சபை என்பவை ஒழுங்கு செய்துள்ளன. (க)

புல எதாபபின

பகிரங்கமாக நடத்தப்பட வேண்டும் என்று 8 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா, சீனா உட்பட நான்கு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

பாதுகாப்புச் சபைக்கூட்டத் தொடர் இரகசியமாக நடத்தப்படவேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதிநிதி வற்புறுத்தினார். கூட்டம் இரகசியமாக நடத்தப்பட்டால், இச் சர்வதேசசபையின் நடைமுறைகள் பற்றி நியாயமான சந்தேகங்கள் எழும் என்று ஐ. நா.வுக்கான இந்தியத் தூதுவர் கரீக்கான் தெரிவித்தார்.

வளைகுடா யுத்தம் ஆரம்பமான பிறகு கூடும் முதலாவது ஐ. நா. பாதுகாப்புச்சபைக் கூட்டம் இதுவாகும்.

## திருவிழா ரத்து

எதிர்வரும் 17-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற வேண்டிய சிறுத்தீவு புனித லூர்த்தம்மா ஆலயத் திருவிழா ரத்து செய்யப்பட்டுள்ளதாக குருநகர், பங்குத்தந்தை வண. பி. எம். இம்மனுவேல் அடிகளார் தெரிவித்தார். (21)

இந்தியா

வெறுக்கிருப்பதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மருத்துவக் கல்லூரியில் தற்போது படித்து வரும் மாணவர்கள் படிப்பை முடிக்கும் வரையிலான காலத்திற்கு மட்டுமே இந்த நியமனம் மேற்கொள்ளப்படுமென்றும், சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 2000 மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுகின்றனர் என்றும், ஆனால் தற்போது 900 மருத்துவ நிபுணர்களே உள்ளனர் என்றும் மேற்படி அமைச்சு அறிவித்துள்ளது.

1980 ஆம் ஆண்டில் இதே போல நிலைமை நிலவிய போது, இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பதவி விலகிய

லைப் பாராட்டவே அவர்கள் சந்தித்ததாக பின்னர் செய்தியாளரிடம் பேசியபோது வி. பி. சிங் தெரிவித்தார்.

ஆளுநர்களை மாற்றக் கூடாது என்றும், இது தெட்டத்தெளிவாக அரசியல் சட்டப் பிரிவுகளை மதித்து நடக்க வேண்டுமென்றும் ஆளுநர் பதவியை ராஜினாமா செய்திருக்கும் எஸ். எஸ். பர்னாலா தெரிவித்தார்.

விமான நிலையத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய பர்னாலா தன்னை பதவி விலகக் கேட்டதாகவும், அதற்கு இசையாமல் தான் பதவி விலகியதாகவும் தெரிவித்தார். தனது சொந்த ஊரான பர்னாலா கிராமத்தில் அல்லது சண்டிகாரில் தங்கி பஞ்சாப் பிரச்சினையைத் தீர்க்கத் தன்னால் இயன்றதைச் செய்ய முயற்சிப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா

யுமே பயன்படுத்திச் இலட்சுமி கலா தனியார், அரசசேர்தலுக்களுக்கு நாசம் விளைவிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், இதனால் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐப்பட்டமான

இது தொடர்பாகவே திரு. பாலகுமாரனுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டார்.

திரு. பாலகுமாரன் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றத்திலிருந்து விலகுவது என ஈழவர் ஜனநாயக முன்னணி தீர்மானித்திருந்த சூழ்நிலைக்கும், தற்போதைய சூழ்நிலைக்கும் இடையே எந்த முன்னேற்றமுமில்லை. மாறாக மேலும் நெருக்கடிகள் அதிகரித்து சிறிலங்கா அரசால் தமிழ் மக்கள் மேல் சமாதானத் தண்டிக்கப்படும் நிலையே காணப்படுகிறது. இந்நிலையில் மீண்டும் பாராளுமன்றம் செல்வதன் மூலம் எதைச் சாதித்துவிடலாம் என்பது கேள்விக்குறியாகிறது.

தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் தொடரும் வேளையில் சிறிலங்கா அரசுக்குச் சார்பாகச் செயற்பட முனைவது துரோகத்தனமானது. இவர்களின் இத்தகைய செயற்பாடு அப்பட்டமான சுயநலநோக்கமேயன்றி வேறில்லை என்பது தெளிவெனவும் அவர் தெரிவித்தார்.

# 29 ஆம் நாள் வளைகுடா போர்

★ மெக்காவை நோக்கிப் பறந்துசென்ற அமெரிக்கப் போர் விமானமொன்று சவூதியில் நொருங்கி விழ்ந்தது. அதிலிருந்த இரு விமானிகளும் உயிரிழந்தனர். இவ்விமானம் விழ்ந்ததற்கான காரணம் தெரியவில்லை.

★ சோவியத் ஜனாதிபதி கொர்பசேவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்த ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக் அசீஸ் ஞாயிறன்று மொஸ்கோ செல்லவுள்ளார்.

★ வளைகுடா யுத்தத்தை விஸ்தரிக்க வேண்டாமென வாஷிங்டனில் 41 அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

★ சவூதி அரேபியாவின் வடகிழக்கு நகரமான ஹபர் அல்பசர் மீது ஈராக் நேற்று இரண்டு ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. இந்நகரம் ஈராக் எல்லையில் இருந்து 100 கி. மீற்றர் தூரத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

★ பாக்தாத்திலுள்ள கேந்திர நிலையங்கள் தொடர்பான அமெரிக்க கொள்கை மீளாய்வு செய்யப்படவுள்ளது என இந்தகவலை அமெரிக்க தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

★ நேற்று முன்தினம் ஈராக் மீது 400 வான் தாக்குதல்களை அமெரிக்கா மேற்கொண்டதாக ஈராக் இராணுவ அறிக்கை கூறுகின்றது. 100இற்கும் அதிகமான தாக்குதல்கள் குடியிருப்பு இலக்குகள்மீது நடாத்தப்பட்டதென ஈராக் அறிவித்துள்ளது.

★ பாகிஸ்தான் தேசிய பாராளுமன்றச்சபை பாக்தாத்தில் அப்பாவி மக்கள் பதுங்குகுழிமீது பன்னாட்டுப்படைகள் மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

★ பாக்தாத்தில் பதுங்குகுழிமேல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது ஒரு அரசியல் தீர்வுக்கு வழிவகை செய்யும் என்று பிஜியில் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு

துப்பாக்கிவேட்டுகளைத் தீர்த்தனர். இந்த நகர மக்கள் மேல்நாட்டுச் செய்தியாளர்களைக் கண்டதும் கோபாவேசத்தோடு வார்த்தைகளை உமிழ்கிறார்கள். பெண்கள் கூட மேல்நாட்டவரைப் பார்த்து வசைபாடுகிறார்கள். கூக்குரலிடுகிறார்கள். மக்களின் கோபவெள்ளம் யாரை நோக்கி பாய்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமேயில்லை. தாக்கப்பட்ட இடத்திலிருந்து புகை இன்னமும் வந்த வண்ணமேயுள்ளது, மூச்சு முட்டுகிறது. இடிபாடுகளிடையே மீறி சடலங்களை ஒன்றன்பின் ஒன்றாக மீட்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. சடலங்களை வெளியே கொண்டுவருபவர்கள் முழங்கும் ஒரேவசனம் 'இறைவன் ஒருவனே' என்பதுவே. பெரும்பாலான சடலங்கள் இனங்காணமுடியாத அளவுக்குக் கருகிச் சிதைந்துபோயுள்ளன. குழந்தைகளின் சடலங்களே அதிகம் என்பதில் சந்தேகமில்லை. நூற்றுக்கணக்கானோர் சோகவுருவாக வாய்விட்டே புலம்புகின்றனர்.

இடத்தைப் பார்வையிட்ட செய்தியாளர்கள் சிதைந்த கட்டடத்தில் கண்டபச்சை நிறக்கூறின் இடத்தை மறைப்பதற்காகப் போடப்பட்டவையன்றி இராணுவ இலக்குகள் அல்ல எனக் கூறியுள்ளனர். ஒரு தொலைக்காட்சியானது விளக்கமாக அப்பாதாள அறையின் மேல் இருந்தது ஈராக்கிய அரசக்கட்டடங்களைப் பாதுகாக்க இடமான எதிர்ப்புப் பீரங்கிகள் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் இதப்பதுங்கு குழிக்கு சமீபமாக எவையுமே இருந்திருக்கும் வாய்ப்பு இல்லையெனத் திட்டவட்டமாக கூறியுள்ளனர். இப்பாதுகாப்பு அறையின் மேல் "பொது மக்கள் பாதுகாப்பு மையம் இலக்கம் 28" என்று அரபு மொழியில் எழுதப்பட்ட அறிவிப்பையும் காணமுடிந்ததாக எனக்குறிப்பிட்டுள்ளனர்.

அனைத்து

சந்ததியை உருவாக்க இவ்வாறான முயற்சிகளை பெரும் சிரமத்தின் மத்தியில் மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

1987 ஆம் ஆண்டு இராணுவ விபத்து ஒன்றில் மரணமடைந்த லெப். கேணல் பொன்னம்மான் உட்பட 11 போராளிகளின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட இப் பூங்காவை திரு. ராஜகுருவினக்கேற்றி வைத்துத் திறந்து வைத்தார். லவிசமயம அரசியல் பொறுப்பாளர் திரு. ஐயா அவர்கள் தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட பிரச்சாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் மக்கள் முன்னணியின பிரமுகர் திரு. பரா, மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சசீர் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (க)

எரிபொருள்

நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் சந்திரசேகரால் அழைக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயே இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியால் இது வற்புறுத்தப்பட்டது.

இதேவேளை ராஜீவ் காந்தி நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமனைச் சந்தித்து இதுகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார் எனவும் கூறப்படுகிறது.

அடுத்தமாதம்

டம் அடுத்த மாதமளவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரின் போது ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காகச் சபையில் பெரும்பான்மை வலுவைப் பெற ஜனதா தள (எஸ்) அரசாங்கம் முயலுகின்றது எனவும்செய்திகள் கூறுகின்றன.

## 18 ஆம் திகதிவரை நீடிப்பு

வெளிமாவட்ட பரீட்சார்த்திகளின் வேண்டுகோளுக்கு இணங்க வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் திகதி இந்த மாதம் 18 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் மேலதிக கட்டணமும் செலுத்த வேண்டுமென மேற்படி சபை தெரிவித்துள்ளது. (12)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.